09-10-2022 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 12.11.1992

நாளைய விஸ்வ ராஜ்யத்திற்கான ஆதாரம் சங்கம யுகத்தின் சுயராஜ்யம்

இன்று உலகை படைப்பவரான பாப்தாதா தனது அனைத்து சுயராஜ்ய அதிகாரி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இன்றைய சங்கமயுகத்தின் சுய ராஜ்ய அதிகாரிகளே நாளைய விஸ்வ ராஜ்ய அதிகாரி ஆகின்றனர் ஏனெனில் சுய ராஜ்யத்தின் மூலமே விஸ்வ ராஜ்ய அதிகாரம் பிராப்தம் ஆகின்றது. இன்றைய சுயராஜ்ய பிராப்தியின் அனுபவமானது நாளைய விஸ்வ ராஜ்யத்தை விட அதி உன்னதமான அனுபவம் ஆகும். முழு நாடகத்திலும் ராஜ்ய அதிகாரிகள் ராஜ்யம் செய்து வந்துள்ளார் கள். அனைத்திலும் உயர்ந்த முதன்மையானது சுயராஜ்யமே, அதன் ஆதாரத்தால் சுய ராஜ்ய அதிகாரி ஆத்மாக்களான நீங்கள் அனேக பிறவிகள் சத்யுகம்லி திரேதா யுகம் வரையிலும் விஸ்வ ராஜ்ய அதிகாரி ஆகின்றீர்கள். ஆக முதன்மை யானது சுய ராஜ்யம் பிறகு அரை கல்பம் விஸ்வ ராஜ்ய அதிகாரம் மற்றும் துவாபரயுகத்திலிருந்து இராஜ்யம் நடைபெறுகிறது, ஆனால் விஸ்வ ராஜ்யம் அல்ல, மாநிலத் திற்கு ராஜாக்கள் ஆகின்றனர். முழு உலகிற்கும் ஒரே இராஜ்யம், அது சத்யுகத்தில் மட்டுமே நடை பெறும். ஆக மூன்று விதமான ராஜ்யம் சொல்லப்பட்டது. இராஜ்யம் என்பது சர்வ அதிகாரத்தின் பிராப்தியாகும். சத்யுகம் திரேதா யுகத்தின் ராஜ்ய நீதி துவாபர யுகத்தின் ராஜ்ய நீதி மற்றும் சங்கமயுகத்தின் சுயராஜ்ய நீதி இம் மூன்றையும் நன்றாக தெரிந்துள்ளீர்கள்.

சங்கம யுகத்தின் ராஜ்ய நீதி என்பது ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் சுயராஜ்ய அதிகாரி ஆவதாகும். ஒவ்வொருவரும் இராஜயோகி அனைவரும் இராஜயோகிகளே. அல்லது பிரஜா யோகியா? இராஜயோகி தானே. இராஜயோகி என்றால் இராஜா ஆகின்ற யோகி. சுய ராஜ்ய அதிகாரி ஆத்மாக்களின் இராஜ நீதி யாதெனில் இராஜா தனது சேவகர்களுக்கும், பிரஜைகளுக்கும் என்ன கட்டளையிடுவாரோ அந்த கட்டளைப்படியே அவர்கள் செயல்படுவார்கள், அவ்வாறே சுய ராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள் தனது யோக சக்தி மூலமாக தனது ஒவ்வொரு கர்மேந்திரியங்களுக்கும் என்ன கட்டளை பிறப்பிப்பார்களோ அந்த கட்டளைப்படியே ஒவ்வொரு கர்மேந்திரியமும் செயல்படும். பௌதீகமான இந்த உடலின் அனைத்து கர்மேந்திரியங்கள் மட்டுமல்லாமல் மனம், புத்தி, சம்ஸ்காரம உட்பட ராஜ்ய அதிகாரியான உங்களுடைய கட்டளைப் படியே செயல்படும். நீங்கள் விரும்பிய வண்ணம் எங்கு வேண்டுமோ, எப்படி வேண்டுமோ அப்படியே மனமெனும் எண்ணங்களை நிலை நிறுத்த முடியும். அதாவது மனம், புத்தி, சம்ஸ்காரத்திற்கும் ராஜ்ய அதிகாரி சம்ஸ்காரங்களுக்கு வசமாவது சம்ஸ்காரங்களைத்தன் வசம் வைத்து உயர்ந்த நீதியின் வழியில் செயலில் ஈடுபடுத்துவீர்கள், உயர்ந்த சம்ஸ்காரத்தின் வழியில் தொடர்பு உறவு முறையில் வருவீர்கள். ஆக சுய ராஜ்யத்தின் நீதி யாதெனில் மனம், புத்தி சம்ஸ்காரம் மற்றும் அனைத்து கர்மேந்திரியங்கள் மீதும் சுயம் அதாவது ஆத்மாவின் அதிகாரம் இருக்கும். மாறாக ஏதேனும் கர்மேந்திரியம் சில சமயம் கண்கள் ஏமாற்றுகிறது, வார்த்தை ஏமாற்றுகிறது, வாய் ஏமாற்றுகிறது, சம்ஸ்காரம் தனது கட்டுப் பாட்டில் இல்லையெனில் அவரை சுயராஜ்ய அதிகாரி

என்று சொல்ல முடியாது, சுய ராஜ்ய அதிகாரத்திற்கான முயற்சியாளர் என்றே சொல்லக் கூடும். அதிகாரி அல்ல முயற்சியாளர் உண்மையில் ராஜ்ய அதிகாரி ஆத்மாவை கனவிலும் கூட எந்த கர்மேந்திரியமோ, மனம், புத்தி சம்ஸ்காரமோ ஏமாற்ற முடியாது. ஏனெனில் அதிகாரி, அதிகாரி ஒருபோதும் அடிமை ஆக முடியாது. அடிமையானால் அதிகாரியாவதற்கு முயல்பவர் ஆவார். தன்னையே கேளுங்கள் முயற்சியாளரா, அதிகாரியா? அதிகாரி ஆகி விட்டீரா, ஆகிக் கொண்டேயிருக்கின்றீரா? சுய ராஜ்யத்தின் ஆக்மீக பெருமிதம் என்ன அனுபவம் தருகிறது? என்ன ஆகி விடுகின்றீர்கள்? கவலையில்லா ராஜா, கவலை யில்லாத ஊருக்கே ராஜா.

அனைவரிடத்திலும் மிகப்பெரிய ராஜா கவலையில்லாத ராஜா மற்றும் அனைத்திலும் மிகப்பெரிய இராஜாங்கம் கவலையில்லா இராஜாங்கம், கவலையில்லா இராஜ்யதிகாரிக்கு முன்னால் இந்த உலக இராஜ்யமும் ஒன்றுமில்லை இந்த கவலையில்லா இராஜ்யதிகாரம் அதி உன்னதம் வாய்ந்தது மற்றும் சுகமயமானது. அங்கு எப்போதுமே இல்லை கவலை. கவலையற்ற நிலை அனுபவமாகிறதா. அல்லது அவ்வப்போது கீழே வந்து விடுகிறீர்களா? சதா ஆன்மீக பெருமிதத்தில் கவலையில்லா ராஜா ஆகுக, இந்த அதிகாரத்தில் இருங்கள். கீழே இறங்காதீர்கள். பாருங்கள் இன்றைய இராஜ்யத்தில் கூட ஒருவர் ஆசனத்தில் இருக்கும் வரை அதிகாரம் உள்ளது. நாளை இருக்கையை விட்டு இறங்கி விட்டால் அவருக்கு அதிகாரம் இருக்கிறதா? சாதாரணமாகி விடுகின்றார். அவ்வாறே நீங்களும் சுயராஜ்யமெனும் பெருமிதத்தில் இருக்கின்றீர்கள், அழியாத சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளீர்கள். அனைவரிடமும் ஆசனம் உள்ளதல்லவா. அந்த ஆசனத்தை விட்டு ஏன் இறங்குகின்றீர்கள்? எப்போதும் ஆசனத்தில் இருங்கள், ஆன்மீக பெருமிதத்தில் இருங்கள். அழியாத ஆசனம் (அகால தக்த்) அந்த அமிர்தசரில் உள்ள அகாலதக்த் அல்ல, இந்த அகால தக்த் (புருவ மத்தி எனும் ஆசனம்) இந்த அகால தக்த் அனைவரிடமும் உள்ளது. அவ்வாறு அகாலதக்த் நசீன் சுய ராஜ்யதிகாரியாக ஆக்கியது யார்? பாபா ஒவ்வொரு பிராமண குழந்தையையும் தக்த் நசீன் ராஜா ஆக்கிவிட்டார். இந்த சிருஷ்டி சக்கரத்தில் தனது அனேக குழந்தைகளை ராஜாவாக மாற்றுகின்ற தந்தை இருக்கின்றார் லட்சுமி நாராயணன் கூட அப்படி ஆக முடியாது. இங்கு பரமாத்மா நாராயணன் கூட அப்படி ஆக முடியாது. இங்கு பரமாத்மா சிவ தந்தை தான் எனது அனைத்து குழந்தைகளும் ராஜா குழந்தைகள் என்று சொல்கிறார். பொதுவாக உலகிலும் தன் குழந்தையை ராஜா என்று சொல்வதுண்டு ஆனால் எது வாயினும் ஆகலாம். வேலைக்காரனும் ஆகலாம். ஆனால் சொல்லளவில் என் மகன் ராஜா என்பார்கள். ஆனால் இப்போது நடைமுறையில் இராஜயோகி அதாவது ராஜா குழந்தை ஆகின்றீர்கள். ஆகவே தந்தைக்கும் பெருமிதம், பிள்ளைகளுக்கும் பெருமிதம் உள்ளது. சுயராஜ்யத்தின் நீதி யாது? தன் மீது இராஜ்யம், ஒவ்வொரு கர்மேந்திரியத்தின் மீதும் அதிகாரம். மாறாக பார்க்க விரும்பவில்லை ஆனால் பார்த்துவிட்டேன் என்பது கூடாது. கண்கள் திறந்திருந்தால் பார்வையில் பட்டுவிட்டது, காதுக்கு கதவுகள் இல்லையே, எனவே காதில் விழுந்து விட்டது விசயம். இரு காதுகள் இருக் கின்றனவே. அப்படி ஏதாவது வேண்டாத விசயம் காதில் விழுந்து விட்டாலும் வெளியேற்ற வழியும் உள்ளது. எனவே இதே பாரத பூமியில் பிரத்யேகமாக (பாபு) காந்திஜியின் நினைவாக சித்திரம் காண்பிககப்பட்டுள்ளது. தீயதை பார்க்காதே, தீயதை பேசாதே, தீயதை கேளாதே. இந்த மூன்றை காண்பித்துள்ளார்கள். நீங்களோ

நான்கினை காண்பிக்கின்றீர்கள. தீயதை சிந்தனை செய்யாதே ஏனெனில் முதலில் வருவது . சிந்தையில் தான், பிறகு சொல்லிலும் பார்வையிலும் வெளிப்படுகிறது. எனவே கட்டுப்படுத்தும் சக்தி, ஆளுமை சக்தியை கையாளுங்கள். ராஜா என்றாலே ஆளுமை சக்தி. இராஜாவாக இருந்துகொண்டு ஆளுமை சக்தியே இல்லையெனில் ராஜா என யார் ஏற்பர். ஆக சுயராஜ்யம் என்பது அரசாட்சி செய்யும் சக்தி மற்றும் கட்டுபடுத்தும் சக்தி ஆகும்.

பாப்தாதா முன்பே கூறியிருக்கின்றார், சில குழந்தைகள் கண்டறிவதில் மிகவும் புத்திசாலியாக உள்ளனர். ஏதேனும் தவறு நிகழ்ந்தால் முறைப்படி இது சரியல்ல என்பதை உணர்கின்றார்கள். இப்படி செய்யக் கூடாது, இது சத்தியம் அல்ல, யதார்த்தமல்ல, யதார்த்தத்திற்கு புறம்பானது என்று புரிந்து கொள்கிறார்கள். ஆனால் புரிந்தும் செய்துக் கொண்டேயிருக்கின்றார்கள், நடந்து விடுகிறது. இதை என்னவென்று சொல்வது? எந்த சக்தி குறைவு ? கட்டுப்படுத்தும் சக்தி இல்லை. இப்போதெல்லாம் கார் ஓட்டுவதை பார்க்கின்றீர்கள், விபத்து நடக்க இருப்பதை புரிந்து கொண்டு பிரேக் போட முயற்சி செய்கிறீர்கள், ஆனால் பிரேக் பிடிக்கவில்லையெனில் நிச்சயம் விபத்து தானே நிகழும், பிரேக் உள்ளது ஆனால் சக்திசாலியாக இல்லை. இங்கு பிடித்த பிரேக் அங்கு சென்று நின்றால் அப்போதும் என்னவாகும்? அவ்வளவு நேரம் மனம் படபடக்கும் அல்லவா? விரும்பியும் செய்ய முடியவில்லை. பிரேக் போட இயலவில்லை, பிரேக் பவர்புல்லாக இல்லாததால் பிரேக் சரியாக பிடிக்க முடிய வில்லை. எனவே இதனை சோதனை செய்யுங்கள். உயர்ந்த மலை மீது செல்லும் போது என்ன எழுதப் பட்டுள்ளது? பிரேக்கை சோதனை செய்யுங்கள் ஏனெனில் பிரேக் பாதுகாப்பு சாதனம். எனவே, இங்கு பிடித்த பிரேக் அங்கு சென்று நின்றால் அது கட்டுப்படுத்தும் சக்தி இருப்பதாகவோ, பிரேக் போட்ட தாகவோ அர்த்தமாகாது. சிலர் வீணானதை தவறென புரிந்து கொண்டு கட்டுப்படுத்த விரும்பு கின்றார்கள், அக்கனமே தவறென்பது சரியாக மாற வேண்டும். அதனையே கட்டுப்படுத்தும் சக்தி என்று சொல்லப்படும். மாறாக யோசித்துக் கொண்டே அரை மணி நேரம் வீணான பிறகு கட்டுப் பாட்டில் வருவது, முயற்சி அதிகம் செய்து அரை மணி நேரம் கழித்து மாறுவது இதனை கன்ட்ரோலிங் பவர், ரூலிங் பவர் என்று சொல்ல முடியாது. இது அவ்வப்போது அடிமை அவ்வப்போது அதிகாரி, கலப்படம் ஆகும். அவரை ராஜ்யதிகாரி என்பதா, முயற்சியாளர் என்பதா? இப்போது முயற்சியாளர் அல்ல, இராஜ்யதிகாரி ஆகுக. இந்த சுயராஜ்ய அதிகாரம் பேரானந்தம் ஆகும்.

சுயராஜ்யதிகாரி என்பவர் சதா ஆனந்தத்திலேயே இருப்பார். ஆனந்தத்தில் இருப்பவர் ஒருபோதும் எந்த விசயத்திலும் குழம்புவதில்லை. மாறாக குழம்பினால் ஆனந்தம் இல்லை. சங்கமயுகத்தில் ஆனந்தமே ஆனந்தம் அல்லவா. அல்லது அவ்வப்போது ஆனந்தமா? சக்திகளுக்கு, பாண்டவர்களுக்கு ஆனந்தமா. ஆக சுயராஜ்யத்தின் நீதி என்ன, விஸ்வ ராஜ்யத்தின் நீதி என்ன? புரிந்ததா. பிரஜாவானாலும் ராயல் குடும்பத்தவரானாலும் பிரஜா பிரஜை அல்ல, பிரஜையும் ஒரு குடும்பமே, குடும்பம் என்ற அடிப்படையில் நடைபெறுவதே சத்யுகம், திரேதா யுகத்தின் ராஜ நீதியாகும். இராஜா என்பார்கள், இருப்பினும் மிகப் பிரியமான தந்தையாக விளங்குவார். குடும்பம் என்ற முறையில் இராஜாங்கம் நடைபெறும் மாறாக ராஜாவிடம் அளவற்ற செல்வமும் பிரஜையிடம் உணவுக்கே வழியில்லாதவராக இருக்க மாட்டார்கள்.

துவாபரயுகம் மற்றும் கலியுகத்தில் சட்டம் ஒழுங்கு முறையில் இராஜாங்கம் நடைபெறும். ஆனால் விஸ்வ ராஜ்யம், தேவ ராஜ்யத்தில் சட்டமல்லாது அன்பு நிறைந்த சம்மந்தத்திலேயே இராஜ்யம் நடைபெறும் எந்த ஒரு ஆத்மாவிற்கும் துக்கம் என்றே சொல்லே தெரியாது இராஜாவானாலும், பிரஜையானாலும் துக்கம் அமைதியின்மை என்பதே கிடையாது. துக்கம் என்ன என்பதே அறியாதவராக இருப்பார்கள். இப்போது சுயராஜ்யம் செய்யும் உங்களை பாப்தாதாவும் எந்த வழியில் நடத்திச் செல்கிறார்? அன்பும் அறிவுரையும் தான். ஸ்ரீமத் (அறிவுரை) படி பிறப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. நீதி வழுவும்பொது தான் கலியுகத்தின் வழிப்படி தனக்குத் தானே பாதை மாறி விடுகின்றனர். விஸ்வ ராஜ்ய நீதி நெறிமுறைகள் மிகவும் அன்பானது ஏனெனில் வேற்றுமை இல்லை, ஒரே இராஜ்யம். அளவிலா செல்வம். பிரஜைகளும் அந்தளவிற்கு செல்வச் சீமான்களாக விளங்குவார்கள். இன்றைய கோடீஸ்வரரையும் விட மிக அதிகமான செல்வ செழிப்புடன் திகழ்வார்கள். இல்லை என்ற பெயர் அடையாளமும் இராது. ஆனால் அதற்கு ஆதாரம் என்ன? சுயராஜ்யம்.

இப்போது முழுமை பெறுகிறீர்கள், எனவே பரமாத்மாவிடமிருந்து பெறப்பட்ட செல்வ செழிப்பு சத்யுகம், திரேதாயுகம் வரையில் அனேக பிறவிகளுக்கு பிராப்தமாகிறது எனவே, சுயராஜ்யமே முதன்மையான ராஜ்யம் என சொல்லப்படுகிறது. பிறகு விஸ்வ ராஜ்யம், மூன்றாவது துவாபர கலியுகத்தில் வருகின்ற தனித்தனியே அமையும் மாநிலங்களின் இராஜ்யம், இந்த ராஜ்யத்தைப் பற்றி நன்கு தெரிந்திருப்பீர்கள், அதைப் பற்றி வர்ணனை செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆக எப்போதும் எந்த பெருமிதத்தில் இருக்க வேண்டும்? சுயராஜ்யம் நமது பிறப்புரிமை எந்த பிறிவியின் பிறப்புரிமை? பிராமண பிறவியின் பிறப்புரிமை. பிரம்மா பாபா ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் பிறந்த நாளன்றே சுயராஜ்ய திலகம் வைத்து விட்டார். திலகதாரி தானே. திலகத்தின் நினைவு உள்ளதா திலகமும் உள்ளது, அரியாசனமும் உள்ளது, கிரீடமும் உள்ள. கிரீடதாரிதானே. என்ன கிரீடம் ? உலக நன்மைக்கான கிரீடம். விஸ்வ கல்யாணகாரி தானே ! து்ய்மையெனும் கிரீடமும் உலக நன்மைக்கான கிரீடமும் இரு கிரீடம் உள்ளது. தூய்மைக்கான கிரீடம் ஒளிக் கிரீடம், உலக நன்மைக்கான கிரீடம் சேவையெனும் கிரீடம்.

விஸ்வ சேவாதாரி தானே. ஒரு மாநிலத்திற்கான சேவாதாரி என்று நினைக்காதீர்கள். நாங்கள் குஜராத், இராஜஸ்தான், டில்லிக்கான சேவாதாரி என்பதல்ல. விஸ்வ சேவாதாரி. எங்கேயிருந்தாலும் உணர்வில், பார்வையில் உலகம் இருக்கட்டும். விஸ்வ சேவாதாரி ஆகவில்லையெனில் சுய ராஜ்யமும் இல்லை, பிறகு துவாபர, கலியுகத்தில் மாநில ராஜாவே ஆக வேண்டும், ஆனால் விஸ்வ இராஜ்யதிகாரி ஆவதற்காக சதா தனது திலகம், கிரீடம், ஆசனம் எப்போதும் இதில் நிலை பெற வேண்டும். உடலோடு ஆசனதில் அமருவதல்ல. ஆனால் புத்தி மூலமாக நினைவெனும் நிலையில் நிலைத்திருப்பதாகும். நினைவில் நிலைத்திருப்பதே ஆசனத்தில் அமருவதாகும். இதில் எப்போதும் அமரலாம். உடலோடு எவ்வளவு நேரம் அமர முடியும்? களைத்து விடுவீர்கள் அல்லவா. ஆனால் புத்தி மூலமாக நல்லதொரு மனோநிலையில் நிலைத்திருப்பது இதய சிம்மாசனத்தில் அமருவதாகும். இது சுலபம் தானே. ஆக சுயராஜ்யத்தின் பெருமிதத்தில் என்றென்றும் நிலை பெறுங்கள். புரிந்ததா?

என்ன செய்ய வேண்டும்? முயற்சியாளர் அல்ல ஆனால் அதிகாரி ஆக வேண்டும். அனைவரும் சந்திப்பை கொண்டாடினீர்களா. அனைவரும் பரமாத்மாவின் சந்திப்பைக் கொண்டாட ஓடோடி வந்துள்ளீர்கள். சந்திப்பு விழாவில் வந்துள்ளீர்களா அல்லது கூட்டத்தில் வந்துள்ளதாக உணர்கிறீர்களா? ஓய்வாக உள்ளீர்களா. ஒய்வாக இருப்பது, உண்பது நடப்பது அனைத்தும் சௌகரியமாக உள்ளதா. இருப்பினும் நீங்கள் மிகவும் பாக்கியசாலிகளே. மற்றத்திருவிழாக்களைப் போன்று மண்ணில் உறங்க வில்லையே. இங்கே கட்டில், போர்வை கிடைத்துள்ளது. அங்க திருவிழாக்களில் குளித்தாலும் மண் அமர்ந்தாலும் மண், உண்ணும்போதும் கூடவே மண்ணும் சேர்ந்தே வரும். இங்கே குழந்தைகள் தனது வீட்டிற்கு வந்துள்ளீர்கள். பெருமிதத்துடன் வருகின்றீர்கள். தந்தைக்கும் மகிழ்ச்சி, குழந்தைகளுக்கும் மகிழ்ச்சி. இந்த கூடாரத்தில் பின்னால் அமர்ந்திருப்பவர்கள் எல்லோரை யும் விட முன்னால் இருப்பவர் ஆவீர்கள் ஏனெனில் பாப்தாதாவின் முதல் பார்வை கடைசி வரையிலும் செல்கிறது. நல்லது.

அனைத்து சுயராஜ்யதிகாரி கவலையில்லா ராஜா குழந்தைகளுக்கு, அனைத்து விஸ்வ ராஜ்யதிகாரி பல பிறவிகளுக்கு முற்றிலும் முழுமையாக இருக்கும் ஆத்மாக்களுக்கு. சதா திலகம், கிரீடம், அரியாசனத்திற்கு அதிகாரியான குழந்தைகளுக்கு, எப்போதும் உலக சேவைக்கான ஊக்கம், உற்சாகத்தில் இருக்கும் விசேஷ குழந்தைகளுக்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இருக்கும் அனைவரையும் நேரில் இருப்பதாக அனுபவம் செய்யும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் பன் மடங்கு அன்பு நினைவுகள். மேலும் அனைவருடைய அன்பு நிறைந்த கடிதங்களுக்கும் பதில் தருகின்றார் பாபா உள்நாடு மற்றும் அயல் நாட்டில் உள்ள அனைவரும் அவரவருக்கேயான விதிமுறைப்படி சுய முன்னேற்றத்தில் வெற்றியடைகின்றனர். மேலும் சேவையிலும் சதா அபிவிருத்தி அடைவதற்கான உற்சாகத்தில் இணைந்துள்ளனர்.

எனவே உலகின் எந்தக் கோடியில் இருப்பவராயினும் அவர்களது நினைவு, சேவைச் செய்திகள், அன்பு நிறைந்த கடிதம், மனோ நிலையைப் பற்றி ஊக்கம் உற்சாகம் நிறைந்த செய்திகள் யாவும் கிடைத்த வண்ணம் உள்ளது. மேலும் பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அவரவர் பெயர் குறித்து அவரவரது சிறப்பம்சம் குறித்து அன்பு நினைவுகளை வழங்குகின்றார். எப்போதும் இதே நினைவு அன்பெனும் பராமரிப்பில் வளர்ந்துக் கொண்டிருக்கின்றீர்கள். மேலும் பறந்து பறந்து இலக்கை எட்டியே தீருவோம் என்பீர்களா அல்லது இலக்கை அடைந்தே விட்டோம் என்பீர்களா. அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

வரதானம் : மாஸ்டர் சர்வசக்திவான் எனும் நினைவின் மூலம் அனைத்து இன்னல்களையும் இல்லையென செய்து விடும் ஆடாத அசையாதவராகுக!

இந்த உடலின் தொழில் வெளிப்படையாக இருப்பது போன்று பிராமண வாழ்வின் தொழிலும் வெளிப்படையாக இருக்க வேண்டும். மேலும் அவரது ஒவ்வொரு செயலிலும் பெருமிதம் இருந்தால் அனைத்து இன்னலும் அமிழ்ந்தே போய் விடும். நீங்கள் சதா ஆடாது அசையாது இருப்பீர்கள். மாஸ்டர் சர்வசக்திவான் எனும் நினைவு சதா இருந்தால் எந்த பலவீனமும் இன்னலில் சிக்க விடாது. ஏனெனில் அவர்கள் ஒவ்வொரு சக்தியையும் தக்க சமயத்தில் தகுந்த செயலில் ஈடுபடுத்த

முடியும். அவர்களிடம் கட்டுப்படுத்தும் சக்தி இருப்பதால் எண்ணமும் செயலும் சமநிலை பெறுகிறது.

சுலோகன்: கடுமையான இன்னல்களில் பயப்படுதவற்குப் பதிலாக அதிலிருந்து பாடம் படித்து தன்னை பரிபக்குவமாக்கிக் கொள்ளுங்கள்.